பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
07 07 2024 **SUNDAY** 6 45 **AM**
வணக்கம் - மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. சுயசார்பு இந்தியாவின் இலக்குகளை எட்டும் வகையில் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு. நிதின்கட்கரி தெரிவித்துள்ளார்.
2. பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக மாநில அரசு பல்வேறு திட்டங்களை திறம்பட செயல்படுத்தி வருவதாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.
3. ஏழை மற்றும் நடுத்தர மக்களின் வாழ்வாதாரத்தை உறுதி செய்யும் வகையில் கூட்டுறவு துறை செயல்பட்டு வருவதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.
4. பிரதமரின் விவசாயிகள் நிதியுதிவி திட்டத்தின் கீழ், தகுதியுடைய தமிழக விவசாயிகளை இணைப்பதற்கான நடவடிக்கைகளை அரசு முறையாக மேற்கொள்ளவில்லை என்று பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.
5. ஆசிய கோப்பை மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் பங்கேற்கும் இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

வாகனங்களின் விற்பனையை அதிகரிப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

மஹாராஷ்ட்ர மாநிலம், நாக்பூரில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசிய அவர், வரும் ஆண்டுகளில் வாகனங்களின் விற்பனை 50 லட்சம் கோடி ரூபாய் அளவை எட்டும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில், பாரம்பரிய விவசாய முறையிலிருந்து, எரிசக்தி வழங்குபவர்களாக மாற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

இத்தகைய நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்க வகையில் பலனளித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

மாற்று எரிபொருளாக எத்தனால் பயன்படுத்தப்பட்டு வருவதை சுட்டிக்காட்டிய அவர், எதிர்காலத்தில் ஹைட்ரஜன் முக்கிய எரிபொருளாக உருவெடுக்கும் என்று அவர் கூறினார்.

சுயசார்பு இந்தியாவின் இலக்குகளை எட்டுவதற்கு இத்தகைய முயற்சிகள் உதவிடும் என்று திரு. நிதின் கட்கரி தெரிவித்தார்.

>>>><<<<

பாக்கெட்டுகளில் விற்கப்படும் உணவுப் பொருட்களின் உறைகள் மீது ஊட்டச்சத்து குறித்த தகவல்களை வெளியிட வேண்டும் என்ற திட்டத்திற்கு மத்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிலை ஆணையம் அனுமதி வழங்கியுள்ளது.

உணவு பாதுகாப்பு மற்றும் தர நிலை ஆணைய தலைவர் திரு. அபூர்வ சந்திரா தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதன்படி, சர்க்கரை, உப்பு மற்றும் பதப்படுத்தப்பட்ட கொழுப்பு உள்ளிட்ட விவரங்கள் பாக்கெட்டுகள் மீது பெரிய எழுத்துக்களில் அச்சிடப்பட வேண்டும் என்று சட்டதிருத்தம் கொண்டுவரப்படும் என்று மத்திய சுகாதார அமைச்சகம் கூறியுள்ளது.

உணவுப் பொருட்களில் உள்ள ஊட்டச்சத்து தொடர்பான விவரங்களை நுகர்வோர் அறிந்து கொள்வதன் மூலம் ஆரோக்கியமான உணவுகளை அவர்கள் தேர்ந்தெடுக்க உதவிடும் என்று அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த சட்டதிருத்தம் குறித்து மக்களின் ஆலோசனைகளை பெறும் வகையில், அதன் வரைவு அறிக்கை இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளதாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

>>>><<<<

பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக மாநில அரசு பல்வேறு திட்டங்களை திறம்பட செயல்படுத்தி வருவதாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், விளிம்பு நிலை மக்களின் வாழ்வாதாரத்திற்காக செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் தமக்கு மகிழ்ச்சி அளிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

பழங்குடியின இளைஞர்கள் பெற்ற கல்வியும், அவர்களுக்கு வழங்கப்பட்ட பணிநியமன ஆணைகளும் அவர்களது எதிர்காலத்தை மாற்றியமைக்கும் என்றும் முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ், திறன்மேம்பாட்டு பயிற்சியை நிறைவு செய்த 146 இளைஞர்களுக்கு பணிநியமன ஆணைகளை திரு. மு.க.ஸ்டாலின் நேற்று வழங்கினார்.

>>>><<<<

ஏழை மற்றும் நடுத்தர மக்களின் பொருளாதார முன்னேற்றம் மற்றும் வாழ்வாதாரத்தை உறுதி செய்யும் வகையில் கூட்டுறவு துறை செயல்பட்டு வருவதாக மாநில அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தமிழகத்தில் கூட்டுறவு இயக்கம் மக்களின் அன்றாட வாழ்க்கையுடன் பிணைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

பயிர்க்கடன், கறவை மாட்டுக் கடன், நகைக்கடன் உள்ளிட்ட பல்வேறு கடனுதவிகள் கூட்டுறவு வங்கிகள் மூலமாக வழங்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

மாநிலத்தில் உள்ள 34 ஆயிரத்து 586 கூட்டுறவு நியாயவிலைக் கடைகள் மூலம் 2 கோடியே 10 லட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருவதாக அவர் கூறியுள்ளார்.

கூட்டுறவு நிறுவனங்களின் மேம்பாட்டிற்கு உதவிடும் வகையிலும், அதுகுறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதத்திலும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

>>>><<<<

பிரதமரின் விவசாயிகள் நிதியுதிவி திட்டத்தின் கீழ், தமிழகத்தில் தகுதியுடைய விவசாயிகளை இணைப்பதற்கான நடவடிக்கைகளை மாநில அரசு முறையாக மேற்கொள்ளவில்லை என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு. அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், பிரதமரின் விவசாயிகள் நிதியுதவி திட்டத்தின் கீழ், இதுவரை தமிழக விவசாயிகளுக்கு 10 ஆயிரத்து 435 கோடி ரூபாயை மத்திய அரசு வழங்கியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2020-21ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ், 44 லட்சம் தமிழக விவசாயிகள் பயனடைந்ததாகவும், தற்போது இந்த எண்ணிக்கை 21 லட்சமாக குறைந்துள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

மாநில அரசின் மெத்தனப்போக்கு காரணமாக, தகுதிவாய்ந்த லட்சக்கணக்கான விவசாயிகள், மத்திய அரசின் இந்த உதவித்தொகையை பெற முடியாமல் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

விவசாயிகளின் நலன் கருதி, மாநில அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று திரு. அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.

>>>><<<<

பகுஜன் சமாஜ் கட்சியின் மாநிலத் தலைவர் ஆம்ஸ்ட்ராங் கொலைவழக்கில் மேலும் 3 பேரிடம் விசாரணை நடைபெற்று வருவதாக வடசென்னை காவல்துறை கூடுதல் ஆணையர் திரு. திரு. ஆஸ்ரா கர்க் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த சம்பவத்தில் தொடர்புடையவர்கள் அனைவரும் விரைவில் கைது செய்யப்படுவார்கள் என்று அவர் கூறினார்.

இச்சம்பவம் தொடர்பாக ஏற்கனவே 8 பேர் கைது செய்யப்பட்டு, வரும் 19ஆம் தேதிவரை நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதனிடையே, ஆம்ஸ்ட்ராங்கின் உடல், சென்னை பெரம்பூரில் உள்ள தனியார் பள்ளியில் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

அவரது உடலை கட்சி அலுவலக வளாகத்தில் அடக்கம் செய்வதற்கு அனுமதி கோரி, சென்னை உயர்நீதிமன்றத்தில் அவரது மனைவி திருமதி. பொற்கொடி மனுதாக்கல் செய்துள்ளார்.

இந்த மனு, அவசர வழக்காக இன்று காலை 8.30 மணியளவில் நீதிபதி பவானி சுப்பராயன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

>>>><<<<

தமிழகத்தில் ஒரு சில இடங்களில் அடுத்த ஐந்து நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மன்னார் வளைகுடா, தென்தமிழக கடலோரப் பகுதிகள், மத்திய மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனையொட்டிய பகுதிகளில் அடுத்த 4 நாட்களுக்கு சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

சென்னையைப் பொறுத்தவரை இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில பகுதிகளில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

>>>><<<<

இருவரிச் செய்திகள்

ஒடிசா மாநிலத்தில் உள்ள உலகப் புகழ் பெற்ற பூரி ஜெகந்நாதர் ஆலயத்தில் இன்று நடைபெறவுள்ள ரத யாத்திரையில் குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு பங்கேற்கிறார்.

>>>><<<<

கார்கில் வெற்றி தினத்தை ஒட்டி, ராணுவம் குறித்து அறிந்து கொள்ளுங்கள் என்ற இரண்டு நாள் நிகழ்ச்சி நேற்று தொடங்கியது.

>>>><<<<

உத்தரபிரதேச மாநிலம், Hathras-ல் 121 பேர் உயிரிழப்புக்கு தொடர்படைய வழக்கில் முக்கிய குற்றவாளி உட்பட மேலும் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

>>>><<<<

அஸ்ஸாமில் பெய்த கனமழை மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக, கடந்த 24 மணி நேரத்தில் 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

>>>><<<<

குஜராத் மாநிலம், சூரத்தில் அடுக்குமாடி கட்டிடம் இடிந்து விழுந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

>>>><<<<

தில்லி மாநில அமைச்சர் திரு. சத்யேந்திர ஜெயின் மீதான ஊழல் வழக்கு தொடர்பாக விசாரணை நடத்த அம்மாநில துணை நிலை ஆளுநர் திரு. வி.கே. சக்சேனா அனுமதி வழங்கியுள்ளார்.

>>>><<<<

தெலங்கானா மற்றும் ஆந்திர மாநிலங்களிடையே நிலுவையில் உள்ள அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணும் வகையில், குழு ஒன்றை அமைப்பதென இரு மாநில அரசுகளும் முடிவு செய்துள்ளன.

>>>><<<<

நீலகிரி மாவட்ட எல்லையோர கிராமங்களில் வசிக்கும் பழங்குடியின மக்களின் குறைகளை நிவர்த்தி செய்யும் வகையில், காவல்துறை மற்றும் மாவட்ட நிர்வாகம் சார்பில் குறைதீர் கூட்டம் நடைபெற்றது.

>>>><<<<

கரூர் நிலமோசடி வழக்கில் முன்னாள் அமைச்சர் திரு. எம்.ஆர் விஜயபாஸ்கர் தாக்கல் செய்த முன்ஜாமின் மனுவை மாவட்ட நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

>>>><<<<

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய கோப்பை மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் பங்கேற்கும் இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹர்மன்ப்ரீத் கவுர் தலைமையிலான 15 பேர் கொண்ட இந்திய அணியில் ஸ்மிருதி மந்தனா, ஷெஃபாலி வர்மா, Deepti Sharma, Richa Ghose, Uma Chetry உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ளனர்.

எட்டு அணிகள் பங்கேற்கும் இப்போட்டி வரும் 19ஆம் தேதி தொடங்கி, 28ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

தரம்சாலாவில் நடைபெறவுள்ள முதல் ஆட்டத்தில் இந்தியா – பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

21ஆம் தேதி ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணியையும், 23ஆம் தேதி நேபாள அணியையும் இந்தியா எதிர்கொள்கிறது.

>>>><<<<

இந்தியா – தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையேயான இரண்டாவது மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

சென்னையில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி 7 மணிக்கு தொடங்குகிறது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் தென்னாப்பிரிக்கா 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

>>>>END<<<<